நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

June 2017

2017

## தரம் : உயர்நிலைப் பிரவு (ஆண்டு 11, 12)
## Level : Advanced (Year 11 & 12)

வழங்கப்படும் நேரம் : 75 நிமிடங்கள் (வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 75 Minutes (Including 10 minutes of reading time)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள 1 முதல் 14 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
(10 புள்ளிகள்)

ஔவையார் என்ற திருப்பெயர் தோற்றுவித்த மரபு தமிழில் மிகச்செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. ஔவை மரபு என்பது தமிழ் இலக்கியத்திலும் ஏன் உலக இலக்கியத்திலும் கூட ஒப்பிட்டுக்காட்ட முடியாத அற்புதமாகும் என்று கூறுவர்.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதான சங்ககாலத்தில் கவியரசியாய்ப் பொலிந்த ஔவையையும் கி.பி. 17 - 18 ஆம் நூற்றாண்டில் “பந்தனந்தாதி” என்னும் வணிக குலப்புகழ் பாடும் நூலின் படைப்பாளராகிய இன்னோர் ஔவையாரையும் காண்கிறோம். இவற்றிற்கு இடைப்பட்ட காலத்திலும் பல ஔவையார்களை வரலாறு காட்சிப்படுத்துகிறது. ஆத்திசூடி கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை தந்த ஔவை, கம்பரோடும் ஒட்டக் கூத்தரோடும் கண்ட சோழர்கால ஔவை என்றும் நாம் காண முடிகிறது. ஔவையார் என்ற பெயரில் குறைந்தது ஆறு தமிழ் இலக்கியப் புலவர்க்ள் இருந்திருக்கலாம் என உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தன்னுடைய “உலகத்தமிழ் இலக்கிய வரலாறு கி.பி. 901 – 1300” என்ற நூலில் குறிப்பிட்டுள்ளது.

ஔவை என்றால் மூத்தவள் என்று பொருள் தரும் என்பர். சங்ககால ஔவையாரை நோக்கில் அவரது தமிழ்க்கவித்திறனும் துணிவும் எளிமையும் போற்றத்தக்கன. சங்க இலக்கியங்களில் ஔவை பாடல்களாகப் பல உள்ளன. காதல் வீரம் ஆகிய இருதுறைகளிலும் கருத்துக்களை உணர்த்துவதிலும் உணர்ச்சிக் கூறுகளின் நுண்மையைப் புலப்படுத்துவதிலும் சங்ககால ஔவையாரின் ஆற்றல் அளப்பரியது. அகநானூற்றில் 4 பாடல்களும் புறநானூற்றில் 33 பாடல்களும் நற்றிணையில் 7 பாடல்களும் குறுந்தொகை தொகையில் 15 பாடல்களும் ஔவையாரின் பாடல்களாகக் கிடைத்துள்ளன.

மேற்குறித்த நூல்கள், பாடல்கள் மட்டுமன்றி கல்வியொழுக்கம், அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ்மாலை தரிசன்பத்து ஞானக்குறள் என்னும் நூல்களையும் சில தனிப் பாடல்களையும் ஔவையார் இயற்றினார் என்று சொல்வர்.

ஔவையாரின் நூல்களில் அவர் இயற்றிய நீதி நூல்கள் மிகச் சிறப்பானவை. நல்வழி 40 பாடல்களையும் மூதுரை 30 பாடல்களையும் கொண்ட சிற்றிலக்கியங்கள் ஆகும். செயல், ஊழ், இறைவன், ஒழுக்கம், நிலையாமை, ஈகை, பொருள் ஆகியவற்றை இந்த இரண்டு சிற்றிலக்கியப் பாடல்களும் சிறப்பாக அழகு மிகுந்த உவமைகள் மூலம் எடுத்துரைக்கின்றன. ஆனால் ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் ஒருவரிப் பாடல்களாகும். இவை சிறுவருக்கான பகுதியாகத் தெரியினும் பெரியவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியதும் ஏராளமாக இருக்கின்றன. ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் முதல் குழந்தை இலக்கியம் எனலாம். மழலைகளுக்கான தமிழ் வழிக்கல்வியை உளவியல் பாங்கில் ஔவையார் பாடியுள்ளார். பண்பு நலன் பேணி செய்ய வேண்டுவன செய்யக்கூடாதன என்று பிரித்து வழிகாட்டியுள்ளார்.

பாரதியார், திரு வி.க. ராஜாஜி, கண்ணதாசன் என்று பலரும் ஔவையின் சொல்லைத் தமது நூல்களிலும் பாடல்களிலும் கையாண்டுள்ளனர். பாரதியார் “அவ்வை நூலோ மிகத் தெளிந்த மிக எளிய தமிழ் நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும் படியாக எழுதப்பட்டிருக்கிறது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில் அவ்வை ஒப்பற்றவள், நிகரற்ற திறமை வாய்ந்தவள்” என்று எழுதியுள்ளார்.

“மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று மிதியாமை கோடி பெறும்
உண்ணீருண்ணீரென்று உபசரியார் தம்மனையிலுண்ணாமை கோடிபெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும்
கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடையநா கோடாமைகோடிபெறும்”
என்பது ஔவையாரின் நாலு கோடிப் பாடலாகும்.

1. ஔவையார் எழுதியவை இயற்றியவை என்று இங்கே நீர் கண்ட நூல்களை எழுதுக. (2 புள்ளிகள்)
2. பல ஔவையார் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற கருத்துக்கு இப்பந்தியிலிருந்து சான்று கூறுக. (1 புள்ளி)
3. இவ்வுரைப் பகுதியிலிருந்து சங்ககால ஔவை பற்றி நீர் அறிந்த சிறப்பைத் தெரிந்து எழுதுக. (2 புள்ளிகள்)
4. ஔவையார் பற்றிய பாரதியின் கருத்து என்ன? (1 புள்ளி)
5. ஔவையாரின் ஆத்திசூடி கொன்றைவேந்தன் பெற்றுள்ள சிறப்பை எழுதுக. (2 புள்ளிகள்)
6. நாலுகோடிப் பாடலில் உம்மைக் கவர்ந்த ஒருகோடியைக் குறிப்பிட்டு அதன் சிறப்பகைக் கூறுக. (2 புள்ளிகள்)

நிரலிடப்பட்ட புலவர்களில் கீழே தரப்பட்டுள்ள பாடல் அடிகளுக்குப் பொருத்தமான புலவரைத் தெரிவு செய்க. (5 புள்ளிகள்)

7. அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
8. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
9. தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாடசாலைக்குப் போவென்று சொன்னாள்
10. தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா
11. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தரும்

(a) சோமசுந்தரப் புலவர்
(b) பாரதியார்
(c) பாரதிதாசன்
(d) ஔவையார்

பின்வரும் நூல்களை எழுதிய தமிழ் எழுத்தாளர்களைத் தெரிவு செய்க. (3 புள்ளிகள்)

12. வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்
13. கருவாச்சி காவியம்
14. அக்னிச் சிறகுகள் - சுயசரிதம்

(a) வைரமுத்து
(b) மாத்தளை சோமு
(c) ஆ. ப. ஜெ. அப்துல்கலாம்

பின்வரும் 15 முதல் 24 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க. (புள்ளிகள் 10)

15. தமிழ் மறை என்று கூறப்படும் நூல் எது?
(a) திருக்குறள்
(b) டி. தேவாரம்
(c) நாட்டுப்பாடல்
(d) கவிதை

16. 50ம் ஆண்டு கொண்டாடப்படும் விழா எது?
(a) பவள விழா
(b) வெள்ளி விழா
(c) வைர விழா
(d) பொன் விழா

17. email என்றால் என்ன?
(a) இணையத்தளம்
(b) மின்னஞ்சல்
(c) வலையம்
(d) கணினி

18. வில்வித்தையில் சிறந்தவன் என மகாபாரதத்தில் கொண்டபடப்படுபவன் யார்?
(a) அர்ச்சுனன்
(b) கண்ணன்
(c) வீமன்
(d) தருமன்

19. தமிழ் மொழியின் சிறப்புக்களினால் "எம்மொழி .......................................... "எனச் சிறப்புப் பெற்றது
(a) செம்மொழி
(b) பழமையான மொழி
(c) தமிழ் மொழி
(d) இனிய மொழி

20. பெண் சுதந்திரத்துக்காக துணிந்து கவிதை எழுதிய கவிஞர் யார்?
(a) பாரதியார்
(b) வாலி
(c) திருவள்ளுவர்
(d) கம்பர்

21. நூல்களை எழுதுபவர் யார்?
(a) பண்டிதர்
(b) நூலாசிரியர்
(c) அதிபர்
(d) தலைவர்

22. தெய்வத்தால் ஆகாதது எனினும் முயற்சி தன்மெய் வருந்தக் கூலி தரும் என்று கூறியவர்?
(a) பாரதியார்
(b) இளங்கே அடிகள்
(c) திருவள்ளுவர்
(d) கணியன் பூங்குன்றனார்

23. அவன் என்ற பெயர்ச் சொல்லின் நான்காம் வேற்றுமையுடன் கூடிய வடிவம் எது?
(a) அவனை
(b) அவனால்
(c) அவனுக்கு
(d) அவன்

24. தமிழ் இலக்கிய வரலாற்றில் அற நூல்களும் நீதி நூல்களும் பெருவாரியாக எழுந்த காலம் எது?
   (a) சங்கக்காலம்
   (b) சங்க மருவிய காலம்
   (c) பல்லவர் காலம்
   (d) சோழர் காலம்

பின்வரும் 25 முதல் 29 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்றொடரை கீழ் உள்ள கட்டத்தில் இருந்து தெரிவு செய்க.
(புள்ளிகள் 5)

| | |
|---|---|
| ஏழை எளியவர்கள் | மூலை முடுக்கெல்லாம் |
| ஈவிரக்கம் இன்றி | தோள் கொடுத்து |
| சூரியனைக்கண்ட பனி போல | |

25. வள்ளல் வரதராயன் தன்னுடைய திரண்ட செல்வத்தை .................................. நன்மைக்காக வாரி வழங்கினார்.

26. காணமல் போன எனது கைத்தொலைபேசியை .................................. தேடியும் கடைக்கவில்லை.

27. நாயின் தலையில் சற்றும் .................................. தடியால் அடித்த மாணவனை காவல்துறையினர் கைது செய்தனர்.

28. ஆனந்தன் துன்பத்தில் சிக்கியிருந்த தன் நண்பன் குமாரனுக்கு .................................. அவன் துன்பத்தைக் குறைத்தான்.

29. மாலாவிற்கு வந்த இன்னல்கள் அனைத்தும் .................................. நீங்கியதற்கு நீயே முக்கிய காரணம்.

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ் சொற்களை எழுதுக. (புள்ளிகள் 5)

(தரவேற்றம் புவி நிலக்காட்டி, சொல் செயலாக்கி, வருடி, புலனம், வலையொளி)

30. GPS ..................................................................................

31. UPLOAD ..................................................................................

32. SCANNER ..................................................................................

33. YOU TUBE ..................................................................................

34. WHATS APP ..................................................................................

பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக. (புள்ளிகள் 5)

சற்று உன் முகம் சிவந்தால் மனது
சஞ்சலமாகுதடி
நெற்றி சுருங்கிகொண்டால் எனக்கு
நெஞ்சம் பதைக்குதடி

உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவையென்றோ? கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ

சொல்லு மழலையிலே கண்ணம்மா
துன்பங்கள் தீர்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்

மார்பிலணிவதர்க்கே உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ
சீர்பெற்று வாழ்வதற்கே உன்னைப்போல்
செல்வமுண்டோ

35. இக்கவிதையை ஏழுதியவர் யார்? (1 புள்ளி)
36. கவிஞர் யாரைப்பற்றி வருணிக்கிறார்? (1 புள்ளி)
37. கவிஞர் எவ்வாறு வருணிக்கிறார்? (3 புள்ளிகள்)

38. எழுத்தாக்கம் (15 புள்ளிகள்)
பின்வரும் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.

நான் பாடசாலையில் இருந்து திரும்பி வந்து கொணடிருந்த போது “டுமீல்” என்ற சத்தம் கேட்டது. நான் திரும்பிப்பார்த்த போது ............ எனத் தொடங்கும் கற்பனைக் கதையை எழுதுக.

அல்லது

ஆஸ்திரேலியாவில் தமிழ்பெற்றோர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் பற்றியும் அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது பற்றிய விவரங்களை அடக்கிய ஒரு தகவல் அறிக்கையைத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் வெளியிடுவதற்காக தயாரிக்கவும்

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2017